முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

14 T I

තෙවන වාර විභාගය 2023 (2024)
மூன்றாம் தவணைப் பரீட்சை 2023(2024)
Third Term Examination 2023(2024)

කතෝලික ධර්මය I, II
கத்தோலிக்க திருமறை I, II
Catholic I, II

11 වන ශ්‍රේණිය
தரம் 11
Grade 11

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடம்
Additional Reading time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களை தெரிவு செய்வதற்கும் முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.

## கத்தோலிக்கத் திருமறை I

**கவனிக்க :**

1. **எல்லா வினாக்கதுக்கும் விடை எழுதுக.**
2. **இலக்கம் 01 - 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**
3. **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் சரியான விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே (X) அடையாளமிடுக.**
4. **அவ்விடைத்தாளில் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றை பின்பற்றுக.**

01. "யாவே" என்பதன் பொருள்,
   1. ஆண்டவராகிய கடவுள்
   2. இறைவன் மனிதனைவிட மேன்மையானவர்
   3. யாவே மீட்பளிப்பவர்
   4. இறைவன் உயர்த்துகிறார்

02. யூதர்களும், கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவ சபையினரும் பழைய ஏற்பாட்டு நூல்களாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நூல்களின் எண்ணிக்கை யாது?
   1. 76 நூல்கள் 2. 86 நூல்கள் 3. 46 நூல்கள் 4. 39 நூல்கள்

03. இறைவாக்கினர் என்பதற்கான எபிரேயச் சொல் யாது?
   1. ப்ஹோபேரஸ் 2. நபி
   3. இறைவனுக்காக பேசுபவர் 4. ரூ ஆக்

04. கிறிஸ்து இயேசு யூதர்களுக்கு மட்டுமல்ல உலகிற்கெல்லாம் மீட்பர் என எடுத்துக்காட்ட எழுதப்பட்ட நற்செய்தி எது?
   1. மாற்கு நற்செய்தி 2. மத்தேயு நற்செய்தி
   3. லூக்கா நற்செய்தி 4. யோவான் நற்செய்தி

05. "மனிதனின் விலா எழும்பிலிருந்து பெண் படைக்கப்பட்டாள்" என்பதன் மூலம் வெளிப்படுத்தப்படுவது,
   1. பெண் ஆணின் அடிமை என்பதாகும்.
   2. ஆணுக்கு துணையானவள்.
   3. ஆணை விட பெண் உயர்ந்தவள் என்பதாகும்.
   4. ஆண் பெண்ணிற்கு நிகரானவன் என்பதாகும்.

06. அத்தி இலைகளைக் கொண்டு ஆடை தைத்து அணிந்திருந்த மனிதனுக்கு தோல் ஆடைகளைத் தயாரித்துக் கொடுத்ததன் மூலம் வெளிப்படுத்தப்படுவது,
1. இறை மகிமை
2. இறை மனித உறவு
3. இறைவனின் பராமரிப்பு
4. இறைவனின் அன்பும் இயக்கமும்

07. பிறக்கும் போதே ஆண் குழந்தைகளை கொன்று விடும் எபிரேய தாதியர் யார்?
1. சிப்ரா, பூவா
2. பூவா, தெபோரா
2. தெபோரா, ஹில்கியா
4. பூவா, ஹில்கியா

08. "பார்வோன் உனக்கு செவிசாய்க்க மாட்டான் எகிப்து நாட்டில் என் அருஞ் செயல்கள் பெருகிட இது ஏதுவாகும்" என இறைவன் யாருக்கு கூறினார்?
1. யோசுவா
2. மோசே
3. ஆரோன்
4. ஏரோ

09. இறைவன் நோவாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் வெளியடையாளம்.
1. வானவில்
2. விருத்தசேதனம்
3. வில்
4. வெள்ளம்

10. "இதோ பாரும், உரிய காலத்தில் நிறைவேற இருக்கும் என்னுடைய வார்த்தைகளை நீர் நம்பவில்லை, ஆதலால் அவை நிறைவேறும் வரை பேச்சற்றவராய் இருப்பீர்." இங்கு பேச்சற்றவராய் இருந்தவர் யார்?
1. யோவான்
2. செக்கரியா
3. ஆபிரகாம்
4. மோசே

11. இயற்கைக்கு மாறாக இடம்பெறும் நிகழ்வு புதுமை என கூறியவர்?
1. தூய ஜெரோம்
2. தூய அத்தனாசியர்
3. தூய அகுஸ்தினர்
4. தூய பெனடிக்

12. இயேசு தம் போதனையின் மூலம்,
1. அமைதியினை வெளிப்படுத்தினார்.
2. தமக்கு நேரிடப் போகும் துன்பத்தை எடுத்துக் கூறினார்.
3. இறையாட்சி பற்றி மக்களுக்கு வெளிப்படுத்தினார்.
4. விண்ணரசு பற்றி கூறினார்.

13. "திருமுழுக்கின் மூலமாக நீங்கள் தூய ஆவியின் ஆலயங்கள் ஆனீர்கள். கனமான பாவம் புரிந்து அந்த மாபெரும் உத்தமரை உங்கள் ஆத்மாவிலிருந்து அகற்றி விடாதீர்கள்" என கூறியவர்?
1. தூய அகுஸ்தினார்
2. திருத்தந்தை 2ம் மின்னப்பர்
2. தூய பெனடிக்
4. திருத்தந்தை பெரிய லியோ

14. நோயாளரின் தூய பூசுதல் என அழைக்கப்படும் அருளடையாளம் எது?
1. குருத்துவம்
2. மெய்விவாகம்
3. நோயில் பூசுதல்
4. திருமுழுக்கு

15. திருமணமாகாது தமது முழு வாழ்க்கையையும் இறை அரசுக்காக அர்பணித்தல் என்பது?
1. கீழ்ப்படிதல்
2. குருத்துவ மணத்துறவு
3. கற்பு
4. ஏழ்மை

16. திருமணத்தின் வெளி அடையாளமாக விளங்குவது,
1. திருமண ஒப்பந்தம்
2. மோதிரம்
3. குருவானார்
4. சாட்சியாளர்

17. வனத்துப் பிதாக்கள் என்று அழைக்கப்பட்டவர்களில் முதன்மையானவராக கருதப்படுபவர் யார்?
1. தூய ஜெரோம்
2. தூய அகுஸ்தினார்
3. தூய அம்புறோஸ்
4. தேப்ஸ் சின்னப்பர்

18. "நாம் புரட்சி செய்ய மாட்டோம், புரட்சி நாம் ஆவோம்" எவ் அமைப்பின் விருதுவாக்காகும்?
   1. இயேசுவின் திரு இருதய சபை
   2. மரியாவின் சேனை
   3. இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கம்
   4. கத்தோலிக்க மறைப் பாடசாலை

19. 'ஆளுதல்' என்பதற்கு பயன்படுத்தப்படும் எபிரேயச் சொல்
   1. றதா
   2. அபாத்
   3. ஷாமார்
   4. பராமரிப்பு

20. இறைபடைப்பு எத்தனை நாட்களுக்குட்பட்டது?
   1. 4 நாட்கள்
   2. 5 நாட்கள்
   3. 6 நாட்கள்
   4. 7 நாட்கள்

21. சமாதானம் என்பதற்கு பயன்படுத்தப்படும் எபிரேயச் சொல்.
   1. ஹொக்மா
   2. ஷாலொம்
   3. அமைதி
   4. ஷாமார்

22. உள்ளார்ந்த சமாதானத்தின் பண்புகளாவன,
   1. சாந்தம், அமைதி
   2. உண்மை, நீதி
   3. அன்பு, அமைதி
   4. சுதந்திரம், நேர்மை

23. எமது இறுதித் தீர்ப்பின் போது எம்மை அளக்கும் அளவு கோல் எது?
   1. தராசு
   2. நாம் செய்த நன்மைகள்
   3. வாழ்வின் புத்தகம்
   4. இரக்கச் செயல்கள்

24. நாம் பங்கு கொள்ளும் திருப்பலி முழுமை பெற வேண்டுமெனில்,
   1. முழுத் திருப்பலியில் பங்கு கொள்ள வேண்டும்.
   2. இறை வார்த்தையில் பங்கு கொள்ள வேண்டும்.
   3. காணிக்கைப் பவணியில் பங்கு கொள்ள வேண்டும்.
   4. தேவ நற்கருணைப் பந்தியில் பங்கு கொள்ள வேண்டும்.

25. ஒரு சந்தி பிடிப்பதன் பிரதான குறிக்கோள் யாது?
   1. தருமம் செய்தல்
   2. உணவு உண்ணாதிருத்தல்
   3. பசி பட்டினியை உணர்தல்
   4. வேண்டுதலை நிறைவேற்றுதல்

26. இயேசு திருத்தூதர்களுக்கு கற்பித்த செபம் எது?
   1. அருள் நிறைந்த மரியே
   2. பரலோக மந்திரம்
   3. விசுவாச பிரமாணம்
   4. என் ஆண்டவரே

27. கடவுளை அப்பா, தந்தையே என அழைக்கும் உரிமையை எவ்வருளடையாளம் மூலம் இயேசு எமக்கு வெளிப்படுத்துகின்றார்?
   1. ஒப்புரவு
   2. நோயில் பூசுதல்
   3. குருத்துவம்
   4. திருமுழுக்கு

28. கிறிஸ்தவர்களாகிய எமது ஆன்மீக வாழ்வுக்கு தேவையான உணவு எவை?
   1. மீன், இறைச்சி
   2. நற்கருணை, இரசம்
   3. தேவ நற்கருணை, இறைவார்தை
   4. புழுங்கள்

29. தூய கன்னி மரியா கருவாக உருவான போதே சென்ம பாவ தோஷத்திலிருந்து பாதுகாக்கப்பட்டார் என கூறியவர் யார்?
   1. திருத்தந்தை லியோ
   2. திருத்தந்தை பிரான்சிஸ்
   3. திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர்
   4. தூய கிரகோரி

30. மரியன்னையின் விண்ணேற்புத் திருவிழா கொண்டாடப்படும் நாள்?
   1. மார்கழி 08ம் திகதி
   2. தை 01ம் திகதி
   3. ஆவணி 15ம் திகதி
   4. புரட்டாதி 08ம் திகதி

31. லூர்து நகரில் மரியன்னை யாருக்கு காட்சியளித்தார்?
   1. கெசிந்தா
   2. முடவனான சிறுவனுக்கு
   3. பெர்ணதேத்
   4. லுசியா

32. இயேசுவின் அன்னையும், பரிசுத்த திருச்சபையின் அன்னையும் என்பதை தெளிவுபடுத்தும் திருத்தந்தை 6வது பவுலின் சுற்று மடல் எது?
   1. சுபகெத் கெதர
   2. அன்னையும் ஆசிரியையும்
   3. சுவனியில் அமைதி
   4. மிஸ் டேறியும் பிடெயி

33. மாலை ஆராதனை என அழைக்கப்படும் வெஸ்பஸ் ஆராதனை இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தின் பின் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
   1. திருப்புகழ் மாலை
   2. கட்டளைச் செபம்
   3. ஆராதனை வழிபாடு
   4. நாளிகை வழிபாடு

34. திருப்புகழ் மாலையில் மாலை வேளை பாடப்படும் புகழ்ச்சிப் பாடல் எது?
   1. செக்கரியாவின் பாடல்
   2. மிரியாவின் பாடல்
   3. சிமியோனின் பாடல்
   4. மரியாவின் பாடல்

35. திருப்புகழ் மாலை பாரம்பரியம் எருசலேமில் இருந்ததாக கூறிய துறவி யார்?
   1. அகுஸ்தினார்
   2. பக்கோமியா
   3. எஜேரியா
   4. ஜெசிந்தா

36. கத்தோலிக்க திருச்சபையின் மறைக் கல்வி நூலில் 2705 – 2706 இன் படி தியானம் என்பது?
   1. தேடலாகும்
   2. தவமாகும்
   3. வாழ்வாகும்
   4. முனதை ஒரு நிலைப்படுத்தலாகும்

37. "லெக்சிகோ" என்பது யாது?
   1. இறை வார்த்தையை வாசித்தல்
   2. இறை வார்த்தையை தியாகித்தல்
   3. இறை வார்த்தையின் ஒளியில் செபித்தல்
   4. இறைவனில் நிலைத்தல்

38. தியானம் பற்றி திருச்சபையில் மறுசீரமைப்பு ஏற்பட்ட காலம் யாது?
   1. 17ம் நூற்றாண்டு
   2. 18ம் நூற்றாண்டு
   3. 19ம் நூற்றாண்டு
   4. இரண்டாம் உலக மகாயுத்ததின் பின்

39. தூய வின்சன்டி போல் சபையை ஆரம்பித்தவர் யார்?
   1. லியோ ஜோசப்
   2. கர்தினால் காடயின் ஆண்டகை
   3. திரு பிராங்டப்
   4. அருளாளர் பிறடிக் ஓசாம்

40. உயிர்த்த கிறிஸ்துவை அடையாளப்படுத்துவது,
   1. தண்ணீர்
   2. பாஸ்காத்திரி
   3. வெண்ணிற ஆடை
   4. கிறிஸ்மா தைலம்

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

14 T II

| | | |
|---|---|---|
| තෙවන වාර විභාගය 2023 (2024)<br>மூன்றாம் தவணைப் பரீட்சை 2023 (2024)<br>Third Term Examination 2023 (2024) | කතෝලික ධර්මය I, II<br>கத்தோலிக்க திருமறை I, II<br>Catholic I, II | 11 වන ශ්‍රේණිය<br>தரம் 11<br>Grade 11 |

## கத்தோலிக்கத் திருமறை II

- முதலாம் வினா உட்பட மேலும் நான்கு வினாக்களைத் தெரிந்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

(01) பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.

1. இறைவார்த்தையின் (வெளிப்பாட்டு) மூலகங்கள் இரண்டும் எவை?
2. வெளிப்பாடு என்பதற்காகப் பயன்படுத்தப்படும் கிரேக்கச் சொல்லின் அர்த்தம் என்ன?
3. இயேசுவின் உயிரப்பிற்கு சாட்சிகள் இரண்டு குறிப்பிடுக?
4. எதிர்நோக்கிற்கு எதிரான பாவங்கள் இரண்டும் எவை?
5. இயேசு இறுதி இராவுணவின் போது இயேசு நிறைவேற்றிய செயல்கள் இரண்டு குறிப்பிடுக.
6. மனம் வருந்துதலின் இரு வகைகளும் எவை?
7. கத்தோலிக்க திருமணத்திற்குள்ள சட்ட ரீதியான தடைகள் இரண்டைக் குறிப்பிடுக.
8. படைப்பைப்பற்றி இரண்டாவது கதையில் இறைவன் மனிதனுக்கு அளித்த பொறுப்புக்கள் இரண்டைக் குறிப்பிடுக.
9. உடல் சார்ந்த இரக்கச் செயல்கள் இரண்டைக் குறிப்பிடுக.
10. மரியன்னைக்கு நாம் வணக்கம் செலுத்துவதற்கான காரணங்கள் இரண்டு எழுதுக.

(02) 1. இஸ்ரயேல் இறைவாக்கினரை வகைப்படுத்துக.
2. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்களின் பண்புகள் 3 குறிப்பிடுக.
3. திருமுழுக்கின் வழியாகப் பெற்ற இறைவாக்கு அழைப்பிற்கு நீர் எவ்வாறு சான்று பகர்வீர் என 5 காரணிகள் மூலம் விளக்குக.

(03) 1. பத்துப் பெருந்துன்பங்களில் 2வது, 5வது துன்பத்தினை எழுதுக.
2. இஸ்ராயேல் இனத்தின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொண்ட செயற்பாடுகள் 3 எழுதுக.
3. இஸ்ராயேல் மக்கள் விடுதலைப் பயணத்தில் இறை பராமரிப்பை அனுபவித்த சந்தர்ப்பங்கள் ஐந்தினை குறிப்பிட்டு விளக்குக.

(04) 1. புதுமுக அருளடையாளங்களைக் குறிப்பிடுக.
2. திருமுழுக்கிற்கு பயன்படுத்தப்படுகின்ற அடையாளங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு, அவற்றிற்கான அர்த்தங்களை (விடயங்களை) எழுதுக.
3. உறுதிப் பூசுதல் எனும் அருளடையாளம் பெறத் தேவையான தகுதிகள் 5 குறிப்பிடுக.


(6) WWW.PastPapers.WiKi (5)
Download Term Test Papers, Short Notes From One Place!

(05) 1. பொது குருத்துவத்தைப் பெற்ற அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் மூவிதமான பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அப் பணிகளை எழுதுக.

2. கட்டிளமைப் பருவத்தில் இருப்போரின் வாழ்வைக் கட்டியெழுப்பி உறுதிபெறச் செய்தவற்கான 3 செயற்பாடுகளைக் குறிப்பிடுக.

3. பொதுக் குருத்துவத்தினால் உமக்குத் தரப்படும் தூதுப் பணியை விருத்தி செய்யக்கூடிய செயற்பாடுகள் 5 குறிப்பிட்டு விளக்குக.

(06) 1. திருப்பலியின் ஆரம்பத்தில் காணப்படும் மேன்மை மிகு அடையாளங்கள் 2 பெயரிடுக.

2. காணிக்கை கொடுப்பதன் நோக்கங்கள் மூன்றும் எவை?

3. ஞாயிறு திருப்பலியில் கருத்துள்ள முறையிலும் உயிர்ப்பாகவும் பங்குபற்ற நீர் மேற்கொள்ளும் படிமுறைகள் 5 குறிப்பிட்டு விளக்குக.

(07) எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. புனித யோசேவாஸ் அடிகளார்
2. வெளிப்பாட்டு இலக்கியம்
3. திருப்பலி
4. தவக்காலம்


(6) WwW.PastPapers.WiKi (6)
Download Term Test Papers, Short Notes From One Place!

# LOL.lk BookStore

# විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින් නිවසටම ගෙන්වා ගන්න






| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර | A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් | School Book | ගුරු අත්පොත්

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර, කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**